யா / சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி

பழைய மாணவர் சங்க

# வருடாந்தப் பொதுக் கூட்டம்

J'CHULIPURAM VICTORIA COLLEGE

*OLD STUDENT'S ASSOCIATION*

**ANNUAL GENERAL MEETING**

26-04-1998 ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணி

(இலங்கை நேரம்)

# ஆண்டறிக்கை

28-04-1997 — 26-04-1998

# யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி

# பழைய மாணவர் சங்கம்

# பொதுச் சபைக் கூட்டம்

இடம் : கல்லூரி பிரதான மண்டபம்

காலம் : 26-04-98 ஞாயிறு முற்பகல் 9 30 மணி
(இலங்கை நேரம்)

தலைவர்: திரு. கா. சந்திரபாலன், அவர்கள் அதிபர்
B. A , Dip in-Ed.

## ★ நிகழ்ச்சி நிரல் ★

1. இறை வணக்கம்
2. மௌன அஞ்சலி
3. தலைவர் உரை
4. செயலாளர் அறிக்கையும், ஆண்டறிக்கையும் வாசித்து அங்கீகரித்தல்
5. பொருளாளர் அறிக்கை வாசித்து அங்கீகரித்தல்
6. பிரதம விருந்தினர் உரை
   திரு சு. கணபதிப்பிள்ளை அவர்கள்
   (பிரதிக் கல்விப் பணிப்பாளர், யாழ் வலயம் 02)
7. சபையோர் குறிப்புரை
8. புதுவருட உத்தியோகத்தர் தெரிவு
9. நன்றியுரை
10. இறை வணக்கம்

தங்களையும் தவறாது சமுகம் தருமாறு
அன்புடன் வேண்டுகின்றோம்

தி. உதயசூரியன்
கௌரவ செயலாளர்

# நடப்பாண்டு நிர்வாக சபை

***தலைவர்:-*** திரு கா. சந்திரபாலன்

***துணைத் தலைவர்கள்:-***

திரு வே. நாகராசா
திரு S. அழகரத்தினம்

***செயலாளர்:-*** திரு தி. உதயசூரியன்

***உப செயலாளர்:-*** திரு ந. சிவரஞ்சன்

***பொருளாளர்:-*** திரு மு. நடராசா

***நிர்வாக சபை உறுப்பினர்கள்:-***

திரு கி. சிறீதரன்
திரு பொ. துரைசிங்கம்
திருமதி சி. புனிதவதி
திருமதி அ. சற்குணசிங்கம்
திரு ச. கைலாசநாதன்
திரு சி. ஞானச்சந்திரமூர்த்தி
திரு து. ரகு
திரு அ. பாலசுப்பிரமணியம்
அருட்தந்தை இ. அருள்பாலன்

***கணக்குப் பரிசோதகர்கள்:-***

திரு நா. சண்முகநாதன்
திரு க. நடராசா

## விக்ரோரியாக் கல்லூரி, சுழிபுரம்

## பழைய மாணவர் சங்கம்

# செயலாளர் ஆண்டறிக்கை

1992ம் ஆண்டு பிற்பகுதியில் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தை புனரமைப்புச் செய்ய வேண்டுமென்ற அவாவுடன் பல பழைய மாணவர்கள் ஒன்று சேர்ந்து புனரமைக்கப்பட்ட இச் சங்கம் வெற்றிகரமாக தனது ஏழாவது ஆண்டில் சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறது இச் சங்கம் கல்லூரியின் வளர்ச்சியில் பலவழிகளிலும் தன்னாலான உதவிகளைச் செய்து வரும் இவ்வேளையிலே இவ் ஆண்டறிக்கையைச் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

தற்போதய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டு ஓராண்டைப் பூர்த்தி செய்துள்ள இத் தருணத்தில் பொதுக் கூட்டத்தினைக் கூட்டி எமது செயற்பாட்டினை பொதுச் சபையினருக்கு சுட்டிக்காட்டப்பட வேண்டியது எமது கடமையாகும். இக் காலப்பகுதியில் 09 நிர்வாக சபைக் கூட்டங்களைக் கூட்டிச் செயற்பட்டுள்ளோம்.

எமது செயற்பாடுகள் யாவும் வெளிநாடுகளிலுள்ள இச் சங்கத்தின் கிளைகளின் கைகளிலேயே தங்கியுள்ளது. அதேபோன்று கொழும்புக் கிளையும் எமக்கு அவ்வப்போது உதவி செய்து வருகிறது. வெளிநாடுகளிலுள்ள இக்கிளைகள் எமக்கு அனுப்பிவைத்த நிதியினை வங்கியில் நிலையான வைப்புகளில் வைப்பிலிட்டு, பெறப்படும் வட்டியையே எமது சகல செயற்பாடுகளுக்கும் உபயோகித்து வருகின்றோம். அவர்களது கோரிக்கையும் அதுவேயாகும்.

இச் சங்கம் இக்கல்லூரியில் கல்வி கற்கும் வறிய பின்தங்கிய மாணவர்களுக்கு உதவும் திட்டமொன்றைத் தீட்டியுள்ளது. இதனை நடைமுறைப்படுத்த ஆவன செய்து வருகின்றோம்.

கல்லூரியின் கட்டிடத் திருத்த வேலைகள் பல உடன் செய்ய வேண்டிய அவசிய நிலையை நாம் உணருகின்றோம். இதனை கல்வித் திணைக்களத்திற்கும் ஏனைய முக்கியஸ்தர்களுக்கும் தெரியப்படுத்தி உடன் திருத்த வேலைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு வற்புறுத்தி வருகின்றோம் அத்துடன் வெளிநாடுகளிலுள்ள இச் சங்கத்தின் கிளைகளுக்கும் இதுபற்றி பலமுறை தெரியப்படுத்தியுள்ளோம். விரைவில் கட்டிடத் திருத்த வேலைகள் ஆரம்பமாகும் என்ற அறிகுறி தென்படுகின்றன.

கொழும்புக் கிளையினர் ரூ 5261 25 பெறுமதியான 30½ மீற்றர் திரைச் சேலையை எமக்கு வழங்கியுள்ளனர். இத் திரைச்சேலை பிரதான மண்டப அரங்கிற்குப் பயன்படுத்தப்படுகின்றது. அத்துடன் பல்கலைக்கழகம் சென்ற எட்டு மாணவர்கட்கு ஊக்குவிப்பு வழங்க ரூபா 8000/- வழங்கியுள்ளனர். அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

இக் கல்லூரியின் கிழக்குப்புறமாகவுள்ள வீட்டுடன் கூடிய வளவையும், பனம் வளவையும் கொள்வனவு செய்ய ஆரம்ப நடவடிக்கை எடுத்துள்ளோம். வழமைபோல் பரிசளிப்பு விழாவினைக் கொண்டாட நாம் பூரண ஒத்துழைப்பு வழங்கியுள்ளோம். இதற்காக ரூபா 17500/- செலவு செய்துள்ளோம்.

இக் கல்லூரியில் அதிபராகவோ, பிரதி அதிபராகவோ கடமையாற்றி ஓய்வு பெறுபவர்களுக்கு இச் சங்கம் மதிய போசன விருந்துடன் கூடிய பிரியாவிடை வைபவமொன்றை நடாத்துவதென்ற நிர்வாக சபையின் தீர்மானத்திற்கு அமைவாக, இக் கல்லூரியின் பிரதி அதிபராக நீண்டகாலம் அளப்பரிய சேவையாற்றி ஓய்வுபெற்ற திரு கு. குணபாலசிங்கம் அவர்களுக்கு பிரியாவிடை வைபவமொன்றை பொதுச்சபை உறுப்பினர்களின் அனுசரணையுடன் நடாத்தி சிறப்பித்தோம் இவ் வைபவத்திற்கு சங்க நிதியிலிருந்து எதுவும் பயன்படுத்தவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வருடமும் வழமைபோல திருமுறை முற்றோதல் நிகழ்வை இச் சங்கம் நடாத்தியது இதில் அதிபர் ஆசிரியர்கள் மாணவர்கள், சங்க உறுப்பினர்கள், நலன்விரும்பிகள் ஆகியோர் கலந்துகொண்டு பயனடைந்தனர். இதற்காக ரூபா 701/- மட்டுமே சங்க நிதியிலிருந்து செல விடப்பட்டது ஏனையவற்றை முன்னின்று நடாத்திய இச் சங்கத்தின் உப செயலாளர் திரு ந. சிவரஞ்சன் அவர்களுக்கு எமது நன்றிகள் உரித்தாகுக.

கடந்த வருடம் செய்யப்பட்ட துவிச்சக்கரவண்டி தரிப்பிடத்தின் எஞ்சிய வேலைகளை ரூபா 4000/- செலவில் செய்து முடிக்கப்பட்டது பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கு கல்லூரியின் மலசலகூடத் திருத்த வேலைகளை மேற்கொள்வதற்காக ரூபா 38000/-ஐ முற்பண மாக வழங்கி இவ்வேலையை விரைவில் செய்து முடிக்க உதவியுள்ளோம்.

எமது நிர்வாக காலப்பகுதியில் லண்டன் கிளையினர் இருதடவைகளில் ரூபா 166197/- அனுப்பியுள்ளனர். இப்பணமும் உரிய முறையில் வங்கியில் வைப்பிலிடப்பட்டுள்ளது வருடந் தோறும் கொண்டாடப்படும் ஆசிரியர் தினவிழாவில் இச் சங்கமும் பங்குபற்றி ஆசிரியர்களைக் கௌரவித்தது இதற்காக ரூபா 1400/-ஐ செலவிட்டது இக் கல்லூரியின் விளையாட்டுத் துறையை மேம்படுத்துவதற்காக விளையாட்டு உபகரணங்களை ரூபா 8633/- செலவில் கொள் வனவு செய்து வழங்கியது.

இக்காலப்பகுதியில் கீழ்வருவோர் இச் சங்கத்திற்கு நன்கொடைகளை வழங்கி எம்மை ஊக்கப்படுத்தியது மட்டுமல்ல, அவர்கள் வழங்கிய நன்கொடைகளின் வட்டிப் பணத்தைக் கொண்டு பரிசளிப்பு விழா, பின்தங்கிய கஸ்டப்பட்ட மாணவர்களின் கல்வி ஊக்குவிப்பு ஆகிய வற்றிற்குப் பயன்படுத்தவுள்ளோம்.

1. திருமதி சுப்பிரமணியம் தங்கம்மா — ரூபா 11000/- பணிப்புலம்
   (வறிய மாணவர்கள் புலமைப் பரிசில் திட்டம்)
2. அமரர் திரு க. தியாகராசா — ரூபா 11000/- சுழிபுரம் கிழக்கு
   (பரிசளிப்பு விழா)
3. திருமதி S விஸ்வலிங்கம் — ரூபா 10000/- ஆனைக்கோட்டை
   (பரிசளிப்பு விழா)
4. திரு கு. குணபாலசிங்கம் — ரூபா 10000/- பண்ணாகம்
   (பரிசளிப்பு விழா)

திரு கு குணபாலசிங்கம் அவர்கள் சங்கத்திற்கு வழங்கிய ரூபா 10000/-ற்கு புறம்பாக ரூபா 2000/-ஐ இக் கல்லூரியிலிருந்து "4ஏ" எடுத்து பல்கலைக்கழக முகாமைத்துவ நெறிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவி செல்வி இ. பங்கையற்செல்வி அவர்களுக்கு நேரடியாக வழங்கி ஊக்குவித்துள்ளார்.

பிரான்ஸ் கிளையின் போஷகரும் பழைய மாணவரும் சுழிபுரத்தை பிறப்பிடமாகக் கொண்டவருமாகிய திரு சு. வரதராசா அவர்கள் இங்கு வந்தபோது ரூபா 10000/-ஐ அன்பளிப் பாக வழங்கி கல்லூரியின் விஞ்ஞான ஆய்வுகூட திருத்த வேலைகளை மேற்கொள்ளுமாறு கேட்டிருந்தார். அவருக்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

கனடாவிலிருந்து வருகைதந்த பழைய மாணவன் திரு சுதர்சன் முத்துக்குமாரசாமி அவர்கள் இக் கல்லூரியின் விளையாட்டுத்துறையை மேம்படுத்துவதற்காக ரூபா 6000/- பெறு மதியான பந்துகள், விளையாட்டுச் சீருடைகள் ஆகியவற்றை வழங்கியிருந்தார்.

அதேபோல் திரு குமாரவேல் ரகுபதி (பழைய மாணவர்) ரூபா 2650 - பெறுமதியான 05 கால் பந்துகளை வழங்கி விளையாட்டுத்துறையை மேம்படுத்த உதவியுள்ளார். இவர்களுக் கும் எமது நன்றிகள் உரித்தாகுக.

யாழ் பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகினால் நடாத்தப்படும் கற்கை நெறிகளை வடமராட்சி, தென்மராட்சி ஆகிய பகுதிகளுக்கு விஸ்தரிக்க பல்கலைக்கழக நிர்வாகம் முடிவெடுத்துள்ளமையை வரவேற்ற இச்சங்கம், அதேபோன்று இப்பிரதேச மாணவர்களின் பிரயாணக் கஷ்டங்களை கருத்திற்கொண்டு இக் கல்லூரியிலும் புறநிலைப் படிப்புகள் அலகின் கற்கை நெறிகளை ஆரம்பித்து உதவுமாறு பல்கலைக்கழக நிர்வாகத்தினருடன் தொடர்பு கொண்டுள்ளோம்.

இவ்வாறான நன்கொடைகளைப் பெற்று கல்லூரியின் கல்வி, விளையாட்டுத் துறைகளில் முன்னேற்றம்காண நாம் பெருமுயற்சியெடுத்து வருகின்றோம். கல்லூரியின் ஆசிரியர் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்ய இச்சங்கம் 44650/-ஐ இக்காலப்பகுதியில் செலவிட்டுள்ளது

| | | | |
|---|---|---|---|
| கணித ஆசிரியர் | — 01 | பௌதீகவியல் ஆசிரியர் | — 01 |
| நடன ஆசிரியை | — 01 | அளவையியல் ஆசிரியர் | — 01 |
| மனையியல் ஆசிரியை | — 01 | நூலக உதவியாளர் | — 01 |

எமது சங்கத்தின் துடிப்புமிக்க நிர்வாகசபை உறுப்பினர் அருட்தந்தை இ. அருள்பாலன் அவர்கள் அகால மரணமடைந்துள்ளார். இவரது இழப்பு ஈடுசெய்ய முடியாதது. இவரது சேவையை போற்றுவதுடன் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம் அத்துடன் இக்கல்லூரியில் ஆசிரியர்களாக பணியாற்றி ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் திருவாளர்கள் S. M ஆசைப்பிள்ளை, பொன்னம்பலம், V. சிவசுப்பிரமணியம் ஆகியோர்களின் மரணச் செய்தி கேட்டு அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இச் சங்கம் கல்லூரியின் வளர்ச்சியில் அளப்பரிய சேவையாற்றும் அதிபர் அவர்கட்கும் மற்றும் ஆசிரியர் குழாமிற்கும் தன்னாலான உதவிகளைச் செய்து வருகின்றது. தொடர்ந்தும் செய்யக் காத்திருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இக் கல்லூரியில் நடைபெறும் ஒவ்வொரு வைபவங்களிலும் இச்சங்கத்தின் உறுப்பினர்களையும் அழைத்து கௌரவிப்பதற்காக அதிபர் அவர்களுக்கு எமது நன்றியறிதலைத் தெரிவிக்க விரும்புகின்றோம்.

எமது நிர்வாகக் குழுவினர் மிகவும் திறம்பட ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர் அமரரான நிர்வாகசபை உறுப்பினர் அருட்தந்தை இ. அருள்பாலன் அவர்களின் வெற்றிடத்தை திரு சு தியாகலிங்கம் அவர்களை நிர்வாக சபை நியமித்து நிரப்பியது. எமது நிர்வாக சபை உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்று கூறவிரும்புகின்றேன். எமது நிர்வாக காலப்பகுதியில் எம்மாலானவற்றைச் செய்துள்ளோம். கல்லூரியின் வளர்ச்சிக்கு இன்னும் பல நற்காரியங்கள் செய்ய வேண்டியுள்ளன அவற்றை புதிய நிர்வாகசபை பொறுப்பேற்று நிறைவேற்றுமென எதிர்பார்க்கின்றோம்.

இக்கல்லூரியின் வளர்ச்சியை க. பொ. த (சா/த), க. பொ. த. (உ/த) முடிவுகளின் படியும், மற்றும் கோட்ட, வலயமட்ட இதர பரீட்சை, போட்டி முடிவுகளின் படியும் உணர முடிகின்றது. அத்துடன் விளையாட்டுத் துறையிலும் கணிசமான பல முன்னேற்றங்களைக் கண்டுவருகிறது. இவற்றுக்கெல்லாம் காரணமாக விளங்கும் அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்கள் அனைவருக்கும் நாம் நன்றி தெரிவிக்கின்றோம்.

இறுதியாக இக் கல்லூரியின் வளர்ச்சி மேலும் உச்சநிலைக்கு வளர எல்லாம்வல்ல சிவகாமி சமேத நடராஜப் பெருமானை வேண்டி இவ்வறிக்கையை நிறைவு செய்கின்றேன்.

தி. உதயசூரியன்
கௌரவ செயலாளர்

## இச் சங்கத்தின் கிளை நிர்வாகக்குழு உறுப்பினர்கள்

### 1) கொழும்புக் கிளை:-

தலைவர்:- திரு K. அருணாசலம் அவர்கள்
செயலாளர்:- திரு அ. ஞானமோகன் அவர்கள்
தனாதிகாரி:- திரு S. சிவராம் அவர்கள்

### 2) கனடாக் கிளை:-

தலைவர்:- திரு R. பாலசுப்பிரமணியம் அவர்கள்
செயலாளர்:- திரு K. சிவஅருள்ராஜா அவர்கள்
பொருளாளர்: திரு V. பாலச்சந்திரன் அவர்கள்
ஆலோசகர்:- திரு க. சிவசுப்பிரமணியம் அவர்கள்

### 3) பிரான்ஸ் கிளை:-

தலைவர்:- திரு N. யோகரட்ணம் அவர்கள்
செயலாளர்:- திரு S. அருள்மொழித்தேவன் அவர்கள்
பொருளாளர்: திரு T. மகேந்திரன் அவர்கள்
காப்பாளர்:- திரு S. வரதராஜா அவர்கள்
திரு R. கந்தசாமி அவர்கள்

### 4) இலண்டன் கிளை:-

தலைவர்:- திரு Dr R. சுப்பிரமணியம் அவர்கள்
செயலாளர்:- திரு T. அருள்நாயகம் அவர்கள்
பொருளாளர்: திரு K. நடராஜா அவர்கள்

பழைய மாணவர் சங்கம்

யா / சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி

# உறுப்புரிமை அன்பளிப்புச் செய்தோர் விபரம்

28-04-97 தொடக்கம் 31-03-98 வரை

| | |
|---|---|
| பழைய மாணவர் சங்க இங்கிலாந்துக் கிளை | 166197 — |
| திருமதி சுப்பிரமணியம் தங்கம்மா, பணிப்புலம் | 11000 — |
| க. தியாகராசா, புகையிரத நிலைய அதிபர் சுழிபுரம் கிழக்கு | 11000 — |
| K குணபாலசிங்கம், உப அதிபர் விக்ரோறியாக் கல்லூரி சுழிபுரம் | 10000 — |
| திருமதி S. விசுவலிங்கம், ஆனைக்கோட்டை | 10000 — |
| Dr T. ஆனந்தமூர்த்தி, பண்ணாகம் | 2000 — |
| மா. பொன்னுச்சாமி, சுழிபுரம் கிழக்கு | 1000 — |
| ந சிவரஞ்சன், சுழிபுரம் கிழக்கு | 1000 — |
| ச. கைலாசநாதன், அதிபர், தொல்புரம் | 800 — |
| உப அதிபரின் பிரிவுபசாரத்திற்கு சேகரித்த பணத்தில் செலவு செய்து மிகுதிப் பணம் | 481 50 |
| தி உதயசூரியன், தொல்புரம் | 200 — |
| பரிசளிப்பிற்கு சேர்ந்த பணத்தில் மிகுதி | 2250 — |
| மொத்தம் | 215928 50 |

சங்கத்திற்கு பணம் அனுப்புவோர் பின்வரும் வங்கிக் கிளைக்கு அனுப்பிவைக்கவும்.

வங்கியின் பெயர்: இலங்கை வங்கி
காங்கேசன்துறைக் கிளை
யாழ்ப்பாணம்
நடைமுறைக் கணக்கு இலக்கம் 1290

நிதி அனுப்பிய விபரத்தை பின்வரும் முகவரிக்கு தெரியப்படுத்தவும்

தலைவர்
பழைய மாணவர் சங்கம்
விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்.

யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி

பழைய மாணவர் சங்கத்தின்

# வரவு செலவு சுருக்க அறிக்கை

28-04-97 தொடக்கம் 31-03-98 வரை

**வரவுகள்**

| | | |
|---|---|---|
| 29-04-97 மீதிகள் | | |
| நிலையானவைப்பு | 430000 — | |
| சேமிப்பு வைப்பு | 9428 05 | |
| நடைமுறைக் கணக்கு | 56405 17 | |
| கையிலுள்ள காசு | 3196 35 | 499029 57 |
| சேர்ந்த வட்டி | 58536 02 | |
| அன்பளிப்பு | 213197 — | |
| பரிசளிப்பின் மிகுதி | 2250 — | |
| உப அதிபரின் | | |
| பிரிவுபசாரத்தின் மிகுதி | 481 50 | 274464 52 |
| | | 773494 09 |

**செலவுகள்**

| | | |
|---|---|---|
| கூட்ட அறிக்கை அறிவித்தல் | | 2059 — |
| ஆசிரியர் சம்பளம் | | 40400 — |
| ஆசிரியர் தினம் | | 1399 52 |
| பரிசளிப்பு | | 20000 — |
| பாடசாலை அபிவிருத்திச் சபைக்கு | | |
| கடனாக கொடுத்தது | | 38000 — |
| திருமுறை ஓதல் | | 701 — |
| வெளிநாட்டுத் தொடர்புகள் | | |
| கடிதங்கள், பதிவுத் தபால்கள் | | |
| முத்திரைகள், கடிதத்தலைப்பு | | 1157 — |
| உதைப் பந்து விளையாட்டு | | 8633 — |
| துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் | | 4040 — |
| உப அதிபரின் பிரிவுபசாரத்திற்கு | | |
| படம் பிடித்தது | | 175 — |
| | | 116564 52 |
| மீதிகள்: | | |
| நிலையான வைப்பு | 530000 — | |
| வட்டி | 58536 02 | |
| சேமிப்பு | 43620 85 | |
| நடைமுறைக் கணக்கு | 22876 67 | |
| கையிலுள்ள காசு | 1896 03 | 656929 57 |
| | | 773494 09 |

கா. சந்திரபாலன்
தலைவர்

தி. உதயசூரியன்
செயலாளர்

மு. நடராசா
பொருளாளர்

யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வரவு செலவு விபரம் சரியான முறையில் உள்ளன என்பதை உறுதிப்படுத்துகின்றோம்.

க. நடராசா
நா. சண்முகநாதன்
கணக்காய்வாளர்கள்

01-04-1998

மொன்ற்டு காந்தோல்

~~Mont du Cath Caul~~

Mont du cantal

திருமொழி அச்சகம், சங்கானை